# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1909/54 - 2015 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2015.04.10

*1909/54 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2015, சனவரி மாதம் 18 ஆந் திகதிய 1897/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2015, மார்ச்சு மாதம் 22 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மைத்திரிபால சிறிசேன*
*சனாதிபதி*

*சனாதிபதி அலுவலகம்*
*கொழும்பு 01*
*2015, ஏப்பிறல் 10*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் (இல. 3) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 13, 14, 15, 23 மற்றும் 38 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம் ;

(2) அவ்வறிவித்தலில் பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சிபற்றிய அமைச்சர் (இல.8) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் தலைப்பு "(8) **பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சிபற்றிய அமைச்சர்**" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்.

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் கீழ்வரும் விடயங்களுடனும் தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | • கட்டாய பகிரங்க சேவைச் சட்டம் |
| 2. இணைந்த சேவைகளின் நிர்வாகம் | 2. டிஸ்டன்ஸ் லேர்னிங் சென்டர் லிமிட்டெட் | • (1982 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டம் |
| 3. தபான விதிக்கோவையின் கீழான பணிகள் | 3. வினைத்திறன் செயலகம் | • (1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) அரச கரும மொழிகள் சட்டம் |
| 4. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நாடளாவிய சேவைகளின் நிர்வாகமும் ஆளணி முகாமைத்துவமும், பணிகளும்<br><br>இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கை தொழிநுட்ப சேவை | 4. அரசகரும மொழிகள் திணைக்களம் | • (1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) அரச கரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டம் |
| 5. அரசாங்க சேவைப் பயிற்சி | 5. அரச கரும மொழிகள் ஆணைக்குழு | • (2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம் |
| 6. தேசிய உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்கில் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தலும் செயற்படுத்தலும் | 6. மொழிக் கல்வி பயிற்சி பற்றிய தேசிய நிறுவகம் | • தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டம் |
| | 7. ஓய்வூதியத் திணைக்களம் | • விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டம் |
| | 8. அரச சேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | • தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைகள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம் |
| | 9. உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | • விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்ட முறைகள் (ஆயுதந்தாங்கி படைகள்) சட்டம் |
| | 10. உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவகம் | |

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

7. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு பற்றித் திட்டமிடுதலும் நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் என்பவற்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்

8. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பை செயற்படுத்தல்

9. அரசாங்கத்தின் சகல ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பான அலுவல்கள்

10. அரசாங்க குடிமனைகளை ஒதுக்குதலும் நிருவகித்தலும்

11. உத்தேச அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அரச முறைமைக்குள் நல்லாட்சியை மேம்படுத்தல்

12. நவீன நல்லாட்சி எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்துதல்

13. சக்திவாய்ந்த அத்துடன் பலம்வாய்ந்த பிரசைகளை உருவாக்குமுகமாக மக்கள் எதிர்பார்ப்புகளுக்கு முதலிடம் வழங்கும் அரச சேவையொன்றை கட்டியெழுப்புவதற்கான கொள் கைகளை வகுத்தலும் செயற் படுத்துலும்

14. உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்பான அரசாங்கப் பணிகள்

15. பொது வசதிகள் அலுவல்கள் தொடர்பான உள்ளூராட்சி நிறுவனங் களுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

16. உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களையும் உத்தியோகத்தர் களையும் ஊழியர்களையும் பயிற்றுவித்தல்

17. உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்துடன் தொடர்பான சகல துறைகளும் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய சகல விடயங்களும்

19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும்*
*அரச கூட்டுத்தாபனங்களும்*
*நியதிச்சட்ட நிறுவனங்களும்*

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட*
*வேண்டிய சட்டங்கள்*

- அரச சேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க)
- அரசாங்க விடுதிகள் (உடைமையை மீளப்பெறுதல்) சட்டம்
- பகிரங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம்
- (1957 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) பரிசளிப்புப் போட்டிகள்
- மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்
- பிரதேச சபைகள் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)
- உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனச் சட்டம்
- நகர சபைச் கட்டளைச் சட்டம்
- உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியச் சட்டம் (1916 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க)
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

(3) அவ்வறிவித்தலில் கைத்தொழில், வாணிப அமைச்சர் (இல. 23) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 11 மற்றும் 12 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம் ;
(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 8, 14, 28, 33, 34 மற்றும் 35 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம் ;
(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்:

- (1984 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) புடவை பயிற்சி மற்றும் சேவைகள் நிறுவகச் சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

(4) அவ்வறிவித்தலில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் (இல.25) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் தலைப்பு "**(25) மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்**" எனவும் ;

(5) அவ்வறிவித்தலில் முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் சேவைகள் அமைச்சர் (இல.31) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 1 ஆவது விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தைப் பதிலீடு செய்வதன் மூலம்:

1. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

(6) அவ்வறிவித்தலில் திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர் (இல. 39) என்ற தலைப்பின் I, II மற்றும் III இற்குப் பின்னர் பின்வரும் புதிய தலைப்புக்களைச் சேர்ப்பதன் மூலம்:-

**40. மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி பற்றிய விடயங்களுக்குரிய கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br>2. மாகாண சபைகளுடன் தொடர்பான சகல அலுவல்களும்<br>3. மாகாண சபைகளினது உறுப்பினர்களையும் உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் பயிற்றுவித்தல்<br>4. மாகாண சபைகளின் நிர்வாகத்துடன் தொடர்பான சகல துறைகளும் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் | | • மாகாண சபைகள் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க)<br>• மாகாண சபைகள் (சம்பளங்கள், படிகள் கொடுப்பனவு) சட்டம் (1988 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க)<br>• தற்போது செயற்படுகின்ற அத்துடன் வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாத, இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

**41. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. கிராமியப் பொருளாதார அலுவல்கள் பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. கிராமிய புத்துயிரூட்டல் நிதியம் | • (1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம் |
| 2. கிராமியப் பொருளாதார அலுவல்களுக்காக நிதி திட்டமிடல் | 2. கிராமிய பொருளாதார புத்துயிரூட்டல் நிதியம் (நிதிசார்) | • (1984 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) புடவை பயிற்சி மற்றும் சேவைகள் நிறுவகச் சட்டம் |
| 3. கிராமிய மட்டத்தில் சிறு தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி | 3. ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்) | • தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் சட்டம் (1982 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) |
| 4. கைத்தறி, புடவைக் கைத்தொழில் அபிவிருத்தி | 4. கிராமியத் தலைவர்களைப் பயிற்றுவிக்கும் சர்வதேச மத்திய நிலையம் | • தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க) |
| 5. தேசிய அருங்கலைகள் மற்றும் கலைகளின் அபிவிருத்தியும் ஊக்குவிப்பும் | 5. நெசவுக் கைத்தொழில் பயிற்சி, சேவை நிலையம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |
| 6. இலங்கை கைத்தொழில் உற்பத்திக்காக வடிவமைப்பு அபிவிருத்தியும் விஸ்தரித்தலும் | 6. நெசவுக் கைத்தொழில் திணைக்களம் | |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | 7. கிராமோதய ஜனகலா மையம் | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | 8. இலங்கை கைத்தொழில் சபை (லக்சல) | |
| | 9. தேசிய வடிவமைப்பு நிலையம் | |
| | 10. தேசிய அருங்கலைப் பேரவை | |

**42. விசேட கருத்திட்ட அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. துரித கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களுக்குரிய விசேட நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | | |
| 2. அமைச்சரவையினால் விதித்துரைக்கப்படும் விசேட கருத்திட்டங்களை உரிய ஏனைய அமைச்சுக்களுடன் கூட்டிணைந்து திட்டமிடுதலும் செயற்படுத்துதலும் | | |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *3.* விசேட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ஏனைய அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் | | |
| *4.* சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் தவிர்ப்பதற்காக செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தொடர்புடைய அமைச்சர்களுடன் ஒருங்கிணைத்தல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.